தட்டும் ஒலி) ஆகவே அவர் தொகுதி மக்களுக்காகப் பேச வேண்டுமென்று பிரச்சினைகளை இங்கே கிளப்பி இருக்கிறார் என்று நினைக்கிறேன். ஒன் போல் சிஸ்டம் என்ற அளவுக்கு நான் இன்றைக்குச் சொல்லி இருக்கிறேன். ஒன் போல் சிஸ்டத்தில் பவர் கனெக்ஷன் கொடுக்க 5,000 ரூபாய் செலவாகுமென்று சொல்லியிருக்கிறேன். ஒன் போல் சிஸ்டம் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இன்றைக்கு நிறைவேற்றச் சொல்லியிருக்கிறோம். அவற்றில் விடுபட்டுப் போயிருக்குமானால், என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக அந்தப் பகுதிக்குத் தா ஆவன செய்யப்படும். அத்துடன் இந்த மின்சாரத் துண்டிப்பு நடந்த பிறகு. . .

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) பல்கலைக் கழகங்களின் ஆட்சிமன்ற/நிர்வாகக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு.

பிற்பகல் 2-40.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அந்தக் கேள்விக்கு மட்டும் பதில் சொன்னால் போதும்.

விவாதம் முடிவுற்றது. பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக் கழகங்களுக்கான ஆட்சிமன்றக் குழுவிற்கு அதன் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையான நியமனத் தாள்கள் வரப்பெற்றுள்ளன. தேர்ந்தெடுக்கப் பெறவேண்டிய எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள நியமனத் தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன்.

பல்கலைக் கழகம்.	உறுப்பினர் பெயர்.
தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம்.	திரு. நா. சா. பழனிசாமி.
மனோன்மணீயம் சுந்தரனார்	திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்.
திரு. பீட்டர் அல்போன்ஸ்.	பல்கலைக் கழகம்.

1991 அக்டோபர் 1]

காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகம்.	திரு. மா. சா. மா. இராமச் சந்திரன்.
பாரதியார் பல்கலைக் கழகம்	திருமதி க. பழனியம்மாள்.
	திரு. எச். எம். ராஜு
சென்னைப் பல்கலைக் கழகம்	டாக்டர் எம். பி. சேகர்.
	திரு. அ. தேவராஜ்.
	திரு. எ. கே. சி. சுந்தரவேல்.
	பேராசிரியர் (திருமதி) கவிநிலவு தர்மராஜ்.
	திரு. எஸ். எம். கிருஷ்ணன்.
	திருமதி ஜீனத் சர்புதீன்
மதுரை காமராஜர் பல்கலைக் கழகம்.	திரு. எஸ். எம். துரை.
	திரு. தேனி பன்னீர் செல்வம்
	திரு. எ. தெய்வநாயகம்
	டாக்டர் தே. குமாரதாஸ்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்	திரு. செ. கு. தமிழரசன்.
	திரு. எஸ். சண்முகநாதன்
	திரு. எஸ். எஸ். ஆர். இராமதாஸ்.
பாரதிதாசன் பல்கலைக் கழகம்	திரு. கு. தங்கமுத்து.
	திருமதி இலதா பிரியகுமார்
அண்ணா பல்கலைக் கழகம்	திரு. கா. ப. பட்டாபிராமன்
தமிழ்ப் பல்கலைக் கழகம்	திரு. வே. பெரியசாமி.
	திரு. எஸ். ராஜாராமன்.

ஆதரவற்றோர், அநாதை இல்லங்களின் நிர்வாகக் குழுவிற்கு கீழ்க்கண்டவர்களிடமிருந்து நியமனத் தாள்கள் முறையாக வரப் பெற்றுள்ளன. தேர்ந்தெடுக்கப் பெறவேண்டிய எண்ணிக்கையும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

முறையாக வரப்பெற்றுள்ள நியமனத் தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன்.

திரு. சு. சே. இராஜமன்னார்.

திரு. கே. சிங்காரம்.

திரு. சா. பன்னீர்செல்வம்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை மறுநாள் 3—10—1991 காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.42 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்:

124. 1978-79 முதல் 1985-86 முடிவுள்ள காலவரைக்காக தென்னாற்காடு மாவட்டம் குமராட்சி ஊராட்சி ஒன்றியத்தினால் செலுத்தப்பட வேண்டிய தண்டத் தொகை ரூ. 33,664-ஐ தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 31—10—1990 ஆம் நாளிட்ட 632 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1|1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

125. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8|1971) 49(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்:

* 143. மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1991-92 ஆம்